# முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிக்கை... முதல் பக்கத் தொடர்ச்சி

**முன்னிலும் கூடுதலாக உழைப்பை உதயநிதி ஸ்டாலின் செலுத்திட வேண்டும்!**

கழகத்தின் இளைஞரணிச் செயலாளராக இருந்து இளைஞர்களை ஈர்த்தும், அவர்களை திராவிடக் கொள்கை கொண்டோராகக் கூர் தீட்டியும் வருகிறார். அவரது செயல்பாடுகள் கழகத்தின் வளர்ச்சிக்கும், ஆட்சித் திறன் மூலமாகத் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் இன்னும் கூடுதலாக உழைக்க வேண்டும் என்பதை மனதில் வைத்தே, துணை முதலமைச்சர் பொறுப்பு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. முன்னிலும் கூடுதலான உழைப்பை அவர் செலுத்திட வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோடிக்கணக்கான தொண்டர்களின் உள்ளக் கிடக்கையையும் உணர்வையும் புரிந்துகொண்டு, அனைத்துத் தரப்பு தமிழ்ப் பெருங்குடி மக்களின் எதிர்பார்ப்புகளை அறிந்து அவர்கள் மனநிறைவு அடையும் வகையில் செயலாற்றிட வேண்டுமென்று விழைகிறேன்.

**15 மாத சிறையை ஏற்ற செந்தில் பாலாஜியின் தியாகம்!**

செந்தில் பாலாஜி அவர்களுக்கு மீண்டும் அமைச்சர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அவரது தியாகத்தை நான் வாழ்த்தியதைச் சிலரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அவரை வைத்து கழகத்துக்கு எதிரான சதிச்செயல்களைச் செய்ய ஒரு கூட்டம் திட்டமிட்டது. அதற்கு விலையாக 15 மாத சிறையை ஏற்றதுதான் தியாகம். தன்னால் இயக்கத்துக்குக் களங்கம் வரக்கூடாது என்று நினைப்பவர்களால்தான் இந்த இயக்கம் இயங்குகிறது.

இளைஞரணிக் காலம்தொட்டு என்னோடு களப்பணியாற்றியவர்களான சேலம் ராஜேந்திரன் அவர்களும் ஆவடி நாசர் அவர்களும், மாணவப் பருவம் முதலே திராவிடக் கொள்கையில் ஊறி அடிமட்டத் தொண்டராகக் கழகத்துக்கு உழைத்த தம்பி கோவி செழியன் அவர்களும் அமைச்சர் பொறுப் பேற்கிறார்கள். புதிய அமைச்சர்களுக்கு எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களது கடந்த கால உழைப்பையும், நிகழ்காலத் திறனையும் மனதில் வைத்து இப்பொறுப்புகளை உங்களிடம் ஒப்படைத்துள்ளேன். தங்களுக்கு வழங்கப்பட்ட துறையை எந்த விமர்சனங்களுக்கும் ஆளாகாமல் கவனித்து, அத்துறையின் மூலமாக மாநிலத்தை வளப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பிட்ட சில அமைச்சர்களுக்கு அவர்கள் வகிக்கும் துறையில் மாறுதல்கள் செய்து தரப்பட்டுள்ளன. புதிய துறையைக் கவனத்துடன் கவனித்துப் பணியாற்றுமாறு அவர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

**இந்தியாவிற்கே முன் மாதிரி ஆட்சியாக அமைய உழைப்போம்!**

முன்பே சொன்னது போல, அரசு என்பது கூட்டுப் பொறுப்பு ஆகும். அமைச்சர்களின் கூட்டுச் சேர்க்தாகைதான் முதலமைச்சராகிய நான். அமைச்சர்கள் அனைவர் மீதும் நான் எந்த அளவு நம்பிக்கை வைத்துள்ளேனோ, அதை விட அதிகமான நம்பிக்கையை நாட்டு மக்கள் வைத்துள்ளார்கள். மிகுந்த நம்பிக்கையோடு நமக்கு வாக்களித்துள்ள மக்களின் நம்பிக்கையைக் காக்கும் வகையில் நாம் அனைவரும் செயல்பட வேண்டும்.

'திராவிட மாடல்' ஆட்சியானது இந்தியாவுக்கே முன்மாதிரி ஆட்சியாக அமைய நாம் உழைப்போம்! அறிவிக்கப்படும் ஒவ்வொரு திட்டமும், கடைக்கோடி மனிதரையும் சென்று சேர்கிறதா என்பதைக் கவனிப்போம்! இனி எந்நாளும் தமிழ்நாட்டை திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஆளும் என்ற நிலையை உருவாக்க உறுதியேற்போம்!

**நாளும், மக்கள் - தொண்டாற்றிடுவோம்!**

திராவிட முன்னேற்றக் கழகம் ஆயிரம் காலத்துப் பயிர். தமிழ் மண்ணின் தனித்தன்மையை நிலைநாட்ட, நாளும் மக்கள் தொண்டு ஆற்றிடுவோம்!

இவ்வாறு - முதல்வர் - கழகத் தலைவர் அவர்கள் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

**தமிழ்நாடு அரசின் துணை முதலமைச்சராக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி நியமிக்கப் பட்டுள்ளார். முதலமைச்சரான எனக்குத் துணையாக அல்ல; இந்த நாட்டு மக்களுக்குத் துணையாக அவர் இருக்கப் போகிறார். தனக்கு வழங்கப்பட்ட விளையாட்டுத் துறையின் மூலமாக இந்தியாவின் கவனத்தை மட்டுமல்ல, உலகின் கவனத்தை ஈர்த்தவர் உதயநிதி. விளையாட்டுத் துறை, மிகக் குறுகிய காலத்தில் வீறுகொண்டு எழுந்துள்ளது. நாள்தோறும் விளையாட்டு வீரர்கள் பெற்றுவரும் பரிசுகள், ஒலிம்பிக்கை நோக்கிய நம் மாநிலத்தின் பயணமாக அமைந்துள்ளது.**

**அதேபோல், தமிழ்நாடு அரசின் சிறப்புத் திட்டங்களை மிக உன்னிப்பாக ஆய்வு செய்து வருகிறார். அதன் செயல்பாடுகளை ஒவ்வொரு நாளும் கண்காணித்து அதன் உண்மையான நோக்கத்தை நிறைவேற்றிக் காட்டி வருகிறார் அமைச்சர் உதயநிதி.**

# துணை முதல்வரானார் உதயநிதி ஸ்டாலின்... முதல் பக்கத் தொடர்ச்சி

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பரிந்துரையின்படி, அமைச்சர்கள் முனைவர் க.பொன்முடி வனத் துறை அமைச்சராகவும், தங்கம் தென்னரசு நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சராகவும், ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் பால்வளத் துறை அமைச்சராகவும், சிவ. வீ.மெய்யநாதன் பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சராகவும், மருத்துவர் மா.மதிவேந்தன் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சராகவும், திருமதி. என்.கயல்விழி செல்வராஜ் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சராகவும் மாற்றம் செய்யப்பட்டு இலாகாக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புதிதாக பதவியேற்றுக்கொண்ட நான்கு அமைச்சர்களும் தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் பூங்கொத்து வழங்கி வாழ்த்து பெற்றனர்.

ஆளுநர் மாளிகையில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களுடன், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அமைச்சரவை, குழு புகைப்படம் எடுத்துக்கொண்டது.

இப்பதவியேற்பு விழாவின்போது, சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், திருமதி துர்கா ஸ்டாலின், திருமதி கிருத்திகா உதயநிதி உள்ளிட்ட முதல்வர் அவர்களின் குடும்பத்தினர், கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு, முதன்மைச் செயலாளர் - அமைச்சர் கே.என்.நேரு உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், கூட்டணிக் கட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

புதிய அமைச்சர்களாகப் பொறுப் பேற்றுக் கொண்ட செந்தில் பாலாஜி, இரா.ராஜேந்திரன், ஆவடி சா.மு. நாசர் கோவி. செழியன், ஆகியோரை வாழ்த்தினர்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பெரியார் - அண்ணா - கலைஞர் நினைவிடங்களில் மரியாதை!**

உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று காலை சென்னை மெரினாவில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் நினைவிடங்களில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதனைத் தொடர்ந்து பெரியார் திடலுக்குச் சென்று அங்கு பெரியார் நினைவிடத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார். திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களிடம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துப் பெற்றார்.

இதையடுத்து சென்னை கோபாலபுரம் இல்லத்திற்கு நேரில் சென்று அங்கு முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

கோபாலபுரம் இல்லத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, இயக்குனர் அமிர்தம், குணாநிதி அமிர்தம் உள்ளிட்டோர் பொன்னாடை போர்த்தி வாழ்த்து தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து சென்னை சி.ஐ.டி. காலனி இல்லத்திற்கு நேரில் சென்று அங்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்திற்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார். அப்போது, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதியிடம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து பெற்றார்.

இதற்கிடையே, சென்னை கீழ்ப்பாக்கத்தில் உள்ள பேராசிரியர் இல்லத்துக்கு சென்ற துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், அங்கு பேராசிரியர் அவர்களின் திருவுருவப் படத்துக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். அப்போது, பேராசிரியரின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

**அமைச்சர்கள் நேரில் வாழ்த்து!**

இந்நிலையில், சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள முகாம் அலுவலகத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, அமைச்சர்கள் உள்ளிட்டோர் நேரில் சந்தித்து புத்தகம், பூங்கொத்து மற்றும் சால்வை வழங்கி வாழ்த்து தெரிவித்தனர்.

**தமிழ்நாடு முழுவதும் இனிப்பு வழங்கினர்!**

தி.மு.க. இளைஞரணிச் செயலாளர் உதய நிதி ஸ்டாலின் அவர்கள் துணை முதலமைச்சராக அறிவிக்கப் பட்டிருப்பதை அடுத்து தமிழ்நாடு முழுவதும் தி.மு.க.வினர் பட்டாசு வெடித்து இனிப்பு வழங்கி கொண்டாடி வருகின்றனர். துணை முதலமைச்சராகியுள்ள உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்துக்களும் குவிந்து வருகிறது.

இதேபோன்று தமிழகம் முழுவதும் கழகத் தினர் பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கியும் பட்டாசு வெடித்தும் மகிழ்ந்தனர்.

### தி.மு.க. இளைஞர் அணி - கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டி

# மண்டல அளவிலான போட்டிக்கு மாணவர்களுக்கு பயிற்சி முகாம்!

## திருவண்ணாமலையில் நாஞ்சில் சம்பத் - சி.வி.எம்.பி.எழிலரசன் பங்கேற்பு!

திருவண்ணாமலை, செப். 30 -

தி.மு.க. இளைஞர் அணி சார்பில், கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டியினை முன்னிட்டு, மண்டல அளவிலான போட் டிக்கு, மாணவர்களுக்கு பயிற்சி முகாம் நடைபெற்றது. திருவண்ணாமலையில் நடைபெற்ற பயிற்சி முகாமில் நாஞ்சில் சம்பத், சி.வி.எம்.பி. எழிலரசன், உமா, சௌமியன், மகிழ்நன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பயிற்சி அளித்தனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு, கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலுடன் திமுக இளைஞர் அணி நடத்திய என் உயிரினும் மேலான..! என்ற பேச்சுப்போட்டியில் 17ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். முதற்கட்ட மாக மாவட்ட அளவில் நடைபெற்ற பேச்சுப்போட்டியில் 913பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அடுத்தக் கட்டமாக மண்டல அளவிலான போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில், மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு, திராவிட இயக்க பேச்சாளர்களை கொண்டு பயிற்சி அளிக்கப்படுகிறது. அதனையொட்டி...

29.09.2024 ஞாயிறு அன்று காலை 9.00மணிக்கு, திருவண்ணாமலை, வேட்டவலம் சாலையில் உள்ள எ.வ.வேலு பெண்கள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில், தி.மு.க. இளைஞர் அணி சார்பில், கலைஞர் நூற்றாண்டு பேச்சுப்போட்டியினை முன்னிட்டு, மண்டல அளவிலான போட்டிக்கு, மாணவர்களுக்கு பயிற்சி முகாம் நடைபெற்றது.

பயிற்சி முகாமிற்கு மாநில இளைஞர் அணி துணைச் செயலாளரும், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவருமான க.பிரபு தலைமை வகித்து, பயிற்சி முகாமினை தொடங்கி வைத்தார்.

நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளருமான சி.என்.அண்ணா துரை அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பயிற்சி முகாமில் கலந்து கொண்டு, திராவிட இயக்க சொற்பொழிவாளர் நாஞ்சில் சம்பத், மாநில மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் மற்றும் உமா, சௌமியன், மகிழ்நன் ஆகியோர் மாணவர்களுக்கு பயிற்சி அளித்தனர்.

பயிற்சி முகாமில் கலந்து கொண்டு, மாநில மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் வாழ்த்துரை வழங்கி உரையாற்றினார்.

பயிற்சி முகாமில் காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டம், இராணிப்பேட்டை மாவட்டம், திருவண்ணாமலை வடக்கு, தெற்கு மாவட்டங்கள், வேலூர் உள்ளிட்ட மாவட்டங்களில், மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட 150 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை திருவண்ணாமலை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சு.ராஜாங்கம், எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம். ரமேஷ், எஸ்.சதீஷ்குமார், டி.திலீப்குமார் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

# கட்டடக் கழிவுகளை ஒவ்வொரு மண்டலத்திலும் நிர்ணயிக்கப்பட்டுள்ள இடத்தில் மட்டுமே கொட்டிட வேண்டும்!

## மாநகராட்சி ஆணையாளர் ஜெ. குமரகுருபரன் தகவல்!

சென்னை,செப். 30-

பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில், கட்டட கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் சட்டவிரோதமாக பொது இடங்களில் கொட்டப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, இக்கழிவுகளை சேகரித்துச் செல்வதில் ஈடுபட்டுள்ள தனியார் லாரி உரிமையாளர்கள், தனிநபர்கள், தனியார் நிறுவனங்கள் உரிய விதிமுறைகளைப் பின்பற்றி பெருநகர சென்னை மாநகராட்சியின் அங்கீகாரத்திற்குட்பட்டு அத்தையை கழிவுகளை பெருநகர சென்னை மாநகராட்சியால் இதற்கென ஒதுக்கீடு செய்து நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் எவ்விதமான கட்டணமுமின்றி இலவசமாகக் கொட்டுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தற்போது ஒவ்வொரு மண்டலத்திலும் தலா ஒரு இடம் என கீழே குறிப்பிட்டுள்ள 15 இடங்கள் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன

மண்டலம் 1ல் வார்டு 7, பக்கிங்காம் கால்வாய் சாலை, சாத்தாங்காடு திருவொற்றியூர் (மண்டலம்1 லாரி நிலையம் அருகில்)

மண்டலம் 2 ல் வார்டு 21, காமராஜர் சாலை, மணலி (மண்டல அலுவலகம் 2 அருகில்)

மண்டலம் 3 வார்டு 26 சி. எம் டி. ஏ டிரக் முனையம், இரவு காப்பகம் அருகில் (மாதவரம் பேருந்து நிலையம் பின்புறம்)

மண்டலம் 4ல் வார்டு 37 வடக்கு அவென்யூ சாலை, மகாகவி பாரதி நகர் வியாசர் பாடி.

மண்டலம் 5ல் மற்றும் மண்டலம் 6ல் வார்டு 58 ,வார்டு 70, பழைய கால் நடை கிடங்கின் ஒரு பகுதி, அவதானம் பாப்பையா சாலை, சூளை (சென்னை மாநகராட்சிப் பள்ளி எதிரில்)

மண்டலம் 7ல், வார்டு 91, கவிமணி சாலை (முகப்பேர் ஏரி திட்டம் ஒன்றாவது பிரதான சாலைக்கு எதிரில்)

மண்டலம்8ல் வார்டு 101, செனாய் நகர் முதல் பிரதான சாலை, (கஜலட்சுமி காலனி அருகில்)

மண்டலம் 9ல் வார்டு 120, லாய்ட்ஸ் காலனி (சென்னை மாநகராட்சி ஐடிஐ அருகில்)

மண்டலம் 10ல் வார்டு 127, குரு சிவா தெரு, எஸ். எம்.பிளாக், ஜாபர்கான் பேட்டை கோடம்பாக்கம் (ஆர் 10 , எம்.ஜி .ஆர் நகர் காவல் நிலையம் அருகில் )

மண்டலம்11ல் வார்டு 155, நடராஜன் சாலை மற்றும் பாரதி சாலை சந்திப்பு (ராமாபுரம் ஏரி அருகில்)

மண்டலம் 12ல் வார்டு158, நந்தம்பாக்கம் குப்பை மாற்று வாளாகம், அடையாறு நதிக் கரை அருகில்

மண்டலம் 13 ல் வார்டு 174, வேளச்சேரி பிரதான சாலை, குருநானக் கல்லூரி மற்றும் வேளச்சேரி மயான பூமி அருகில்

மண்டலம் 14ல் வார்டு 186, 200 அடி ரேடியல் சாலை, பெருங்குடி குப்பை கொட்டும் வளாகம்

மண்டலம் 15ல் வார்டு 197, கங்கையம்மன் கோவில் தெரு விரிவாக்கம், காரப்பாக்கம் (தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் அருகில்)

விருப்பமுள்ள கட்டட கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை சேகரித்துக் கொண்டு செல்வதில் ஈடுபட்டுள்ள தனியார் லாரி உரிமையாளர்கள், தனிநபர்கள், தனியார் நிறுவனங்கள் கட்டடக் கழிவுகளை கொட்டுவதற்கான இந்த வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட கழிவு சேகரிப்பாளர்களாகப் பதிவு செய்திட திடக்கழிவு மேலாண்மைத் துறைக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் .

மேற்கண்ட தகவலை மாநகராட்சி ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், தெரிவித்துள்ளார்.

### சென்னை தெற்கு மாவட்டம்

# தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் - வேட்பு மனுத் தாக்கல்

## தலைமைக் கழகம் அறிவிப்பு

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில், சென்னை தெற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆலப்பாக்கம் கு.சண்முகம் மறைவெய்திய காரணத்தால்;

சென்னை தெற்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2024, அக்டோபர் 3 (வியாழக் கிழமை) அன்று ரூ.25000/ வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்."

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் சென்னை தெற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டப் பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

தலைமைக் கழகத்தில், வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/ வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.9.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



பம்மல் தெற்கு பகுதி தி.மு.க.சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சராக கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதை முன்னிட்டு பம்மல் இரட்டைப்பிள்ளையார் கோவில் அருகில் மண்டல குழுத் தலைவர்–பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் வே.கருணாநிதி தலைமையில் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது. உடன் பகுதி அவைத்தலைவர் ப.காலேஸ்வரன்,பொருளாளர் ஆர்.உமாசங்கர்,மாவட்ட பிரதிநிதி பா.டில்லி, மாநகர பிரதிநிதி சு.மனோகர், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எல்.பிரபு உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. 15 ஆவது பொதுத் தேர்தல்

# ஈரோடு வடக்கு மாவட்டம் - பேரூர்க் கழகத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல்

## தலைமைக் கழகம் அறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15ஆவது பொதுத்தேர்தலில் ஈரோடு வடக்கு மாவட்டத்தில் உள்ள நம்பியூர் ஒன்றியம், நம்பியூர் பேரூர் துணைச் செயலாளராக (ஆதிதிராவிடர்) தேர்ந்தெடுக்கப்பட்ட கே.சந்திரன், மாவட்டப் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பி.கே.பழனியப்பன் - அந்தியூர் ஒன்றியம், அத்தாணி பேரூர் பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட கே.எம்.சுப்பிரமணியன் - தூக்கநாயக்கன்பாளையம் ஒன்றியம், காசிபாளையம் பேரூர் அவைத்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட பி.மகாதேவன் ஆகியோர் மறைவெய்திய காரணத்தால்;

ஈரோடு வடக்கு மாவட்டம், நம்பியூர் பேரூர் துணைச் செயலாளர் (ஆதிதிராவிடர்), மாவட்டப் பிரதிநிதி - அத்தாணி பேரூர் பொருளாளர் - காசிபாளையம் பேரூர் அவைத்தலைவர் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து, 2024 அக்டோபர் 3 (வியாழக்கிழமை) அன்று ஒரு பொறுப்புக்கு ரூ.500/ வீதம் தலைமைக் கழகத்தில் கட்டணம் செலுத்தி இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

**தகுதி விவரம்**

பேரூர்க் கழக நிர்வாகப் பொறுப்புகளுக்கும், ஒன்றிய, மாவட்டப் பிரதிநிதிகளுக்கும் போட்டியிடுவோருக்கு வேட்பு மனுவில் முன்மொழிவோரும் - வழிமொழிவோரும், தொடர்புடைய பேரூர்க் கழகத்தில் அடங்கியுள்ள வார்டுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகியாகவோ, பிரதிநிதியாகவோ இருத்தல் வேண்டும்.

வேட்புமனு படிவங்களை மாவட்டக் கழகச் செயலாளரிடம் படிவம் ஒன்றுக்கு ரூ.25/ வீதம் செலுத்தி பெற்றுக் கொள்ளவும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 29.9.2024

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.